41—

கால்நடைக் கிளை நிலையம்

*36219—**திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், டி. ஆண்டிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்திலே உள்ள டி. ஆண்டிப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலே கால்நடை அலகுகளின் எண்ணிக்கை, கால்நடை பராமரிப்புத் துறையினுடைய விதிகளுக்குட்பட்டு 3 ஆயிரம் அலகுகளுக்கும் அதிகமாக உள்ளதால் மேற்படி கிராமத்திலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டிலே அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்குள் இருக்கும் உயிருக்கும் அமுது படைத்தார் ஈசன் என்பது புராணம். கடைக்கோடி கிராமத்தில் இருப்பவரையும் அடையாளம் கண்டு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் அமர வைத்து அழகுபார்க்கும் வாழும் மனித தெய்வம், 67-வது பிறந்த நாள் காணும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2015 பிப்ரவரி 20]

எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட டி. ஆண்டிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையத்தை அரசு அமைக்கும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வரும் நிதியாண்டு என்று சொன்னதற்குப் பதிலாக இந்த ஆண்டிலேயே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? மேலும், தொகுதி மக்களின் சார்பாக கால்நடைக் கிளை நிலையத்தை இந்த ஆண்டே அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விவசாயிகளுடைய காவல் தெய்வமாக இருக்கும் காளை மாட்டை வன விலங்குகளோடு ஒப்பிடுவதை நீக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கால்நடைக் கிளை நிலையம் இந்த ஆண்டு என்றால், வரும் நிதி ஆண்டிலேயே அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காளைகளையெல்லாம் காட்சி விலங்குகள் பட்டியலிலே மத்திய அரசு சேர்த்துள்ளது. அந்தக் காளைகளைக் காட்சி விலங்குகள் பட்டியலிலேயிருந்து மத்திய அரசு விலக்கினால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசின், கால்நடைத் துறைச் செயலாளர் தலைமையிலே ஒரு குழு டெல்லி சென்று 12-1-2015 மற்றும் 13-1-2015 ஆகிய தினங்களிலே மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி காளைகளைக் காட்சி விலங்குகள் பட்டியலிலேயிருந்து நீக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. எனவே, அது தற்சமயம் நிலுவையிலே உள்ளது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

[2015 பிப்ரவரி 20

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட குட்டிமேய்க்கன்பட்டி கிராமத்தில் நல்ல சாலை வசதி, குடிதண்ணீர் வசதிகளுடன்கூடிய கால்நடை தரிசு நிலங்கள் சுமார் 68 ஏக்கரும், அதன் அருகிலுள்ள சின்னாலந்தங்குளம் ஊராட்சியில் 28 ஏக்கர் அரசு கால்நடை தரிசு நிலமும் உள்ளது. அதனால் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற நல்ல அரசு, அந்த இடத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பு இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள்தான் இருந்தன. மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த பிறகுதான் ஒரே நேரத்திலே இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகளை நம்முடைய மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு அமைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வரும் காலத்திலே புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முடிவெடுக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பகுதியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

42—

கள்ளுபடி மானியம்

***8470—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—